https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிறுபாணாற்றுப்படையில் நகை

**செ. சதீஸ்**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழியற்துறை தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021

**ஆய்வுச் சுருக்கம்**

*பழந்தமிழ் நாட்டின் மக்கள்;இ பண்பாடுஇ இயற்கை பற்றிய பல அரிய தகவல்கள் பொதிந்து கிடக்கும் பத்துப்பாட்டில் தமிழர் வாழ்வை உள்ளது உள்ளபடி காட்டும் காலக்கண்ணாடியாக ஆற்றுப்படை நுல்கள் விளங்குகிறது. அவற்றுள் சிறப்புடைத்தானது என போற்றப்படும் சிறுபாணாற்றுப்படை மக்களின் வாழ்வியலையும், உணர்வுகளையும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது. எண்வகை மெய்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ள சிறுபாணாற்றுப்படை நகை மெய்பாட்டினை மிகவும் செம்மையாகப் பேசிச் செல்கிறது. மேலும் தொல்காப்பியர் கூறும் நகை மெய்பாடானது சிறுபாணாற்றுப்படையில் எந்தெந்த பாடலடியில் இடம்பெற்றுள்ளது என்பதை தகுந்த சான்றுகளோடு விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்**

*தொல்காப்பியம், மெய்ப்பாடு, நகை, ஆற்றுப்படை, பத்துப்பாட்டு, அகஇலக்கியம், எள்ளல், முறுவல்*

**முன்னுரை**

*உலகத்தார் உள்ள நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறே புறத்தார்க்கு புலப்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாடு மெய்ப்பாடாகும். சொல்ல வந்ததைக் கண்ணால் காண்பது போல் காதால் கேட்பது போல் உடலினால் உணர்த்துவது மெய்ப்பாடு. தொல்காப்பியர் எண்வகை மெய்பாட்டினைக் கூறுகிறார். அவற்றுள் நகை எனும் மெய்ப்பாடானது சிறுபாணாற்றுப்படையில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை உணர்த்துவதாக இக்கட்டுரை அமைகிறது.*

**மெய்ப்பாடு – விளக்கம்**

*மெய்ப்பாடு என்பது பொருட்பாடு. மெய்ப்பாடு என்பது மெய்யினிடத்தே தோன்றும் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் எனலாம். தொல்காப்பியர் இதனை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டு மெய்ப்பாடு களாகக் கூறுகிறார்.*

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பாலெட்டும் மெய்ப் பாடென்ப”**

*(தொல்.பொருள்.மெய்ப்.-247)*

என்று கூறும் தொல்காப்பியர் நகையினை முதலாவதாக வைத்துள்ளார். அதனை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

**நகை**

**“எள்ள லிளமை பேதைமை மடனென்**
**றுள்ளப் பட்ட நகைநான் கென்ப”.**

*(தொல்.பொருள்.மெய்ப்.-248)*

நகை என்பது முறுவல், அளவே சிரித்தல், பெருகச் சிரித்தல் என மூவகைப்படும். எள்ளல் என்பது நகைமொழி. இளமை என்பது பிள்ளைத்தன்மை. பேதைமை என்பது அறிவின்மை. மடன் என்பது எளிதில் நம்பும் இயல்பு.

எள்ளுதலும் இளமையும் பேதைமையும் மடனும் எனக் கருதப்பட்ட நகை நான்கு. எள்ளுதல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும், பிறரால் எள்ளப்பட்டவழி தான் நகுதலும் என இரு வகைப்படும். இளமை என்பது தான் இளமையால் பிறரரை நகுதலும் பிறரின் இளமை கண்டு தான் நகுதலும் என இரண்டு. பேதைமை என்பது அறிவின்மை. மடமை என்பது தன் மடமையால் நகுதலும், பிறர் மடமையால் நகுதலும் என இரண்டாம்.

**எள்ளல்**

எள்ளல் என்ற சொல்லுக்கு இகழ்ச்சி, நிந்தை செய்தல் என பல பொருட்களை கழகத் தமிழ் அகராதி கூறுகிறது. எள்ளல் என்பது இழித்தலின் வேறுபட்ட நகைமொழி. பழிப்பில் பரிகாசம் விளையாட்டேச்சுப் போன்றது.

பரிசில் அளிக்கும் வள்ளல்களைப் பெறாமல் காட்டிடத்து இருந்து வரும் பாணனை நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று திரும்பும் பாணன் ஒருவன் சந்தித்து இவ்வாறு கூறுகிறான்.

பாணர் தலைவனே! மேற்கே உள்ள சேர நாடு மிக்க செழிப்புடையது. அங்கு எருமைகள் கொழுத்த மீன்களும் கலையும் படி குளங்களில் வயல்களில் நடந்து சென்று செங்கழுநீர் பூவை உண்ணும். உண்டு பிறகு மிளகு படர்ந்த பலாமர நிழலில் காட்டு மல்லிகை படுக்கையில் கிடக்கும். காற்றுக்குக் கொடி அசையும் மஞ்சளின் மெல்லிய இலைகள் அதன் முதுகைத் தடவும். இவ்வாறு செழுமை மிகுந்த காடுகளையும் வலிய தோளினையும் உடைய வஞ்சி நாட்டு அரசனான சேரன் கொடுக்கும் பரிசானது நல்லியக்கோடன் கொடுக்கும் பரிசினை விட குறைவு.

**“குட புலம் காவலர் மருமான் ஒன்னார்**
**வட புல இமயத்து, வாங்கு வில் பொறித்த**
**எழு உறழ் திணி தோள், இயல் தேர்க் குட்டுவன்**
**வரு புனல் வாயில் வஞ்சியும் வறிதே”** *(சிறுபாண் - 47-50)*

சிறப்புடைய கொற்கை நகரையும் வெண் கொற்றக் குடையையும் தேரையும் முத்து மாலையையும் உடைய பாண்டிய நாட்டைச் சென்று பெறும் பரிசில்களை விடவும் நல்லியக்கோடனிடம் பெறும் பரிசல்கள் அதிகமானது.

**தமிழ் நிலைபெற்ற, தாங்கு அரு மரபின்**
**மகிழ் நனை, மறுகின் மதுரையும் வறிதே**

*(சிறுபாண் - 66-67)*

கிழக்குப் பக்கத்தின் செழிப்பு மிக்க நாட்டுக்குத் தலைவனாக விளங்கும் சோழனிடம் கிடைக்கும் பரிசை விடவும் நல்லியக்கோடனின் பரிசுகள் உயர்ந்தது.

**ஓங்கு எயில் கதவம் உருமுச் சுவல் சொறியும்**
**தூங்கு எயில் எறிந்த தொடி விளங்கு தடக்கை,**
**நாடா நல் இசை, நல் தேர்ச் செம்பியன்**
**ஓடாப் பூட்கை உறந்தையும் வறிதே**

*(சிறுபாண் - 80-83)*

இவ்வாறு “பெரும் சிறப்புகளை உடைய நல்லியக்கோடனிடம் நீ செல்வாயாக” என சேர சோழ பாண்டியர்களின் நாட்டு வளத்தையும் கொடைச்சிறப்புகளையும் சொல்லி, பிறகு அவற்றை விடவும் நல்லியக் கோடனின் பரிசுகள் மேன்மையுற்றது எனச் சொல்லும் இவ்விடம் எள்ளல் பொருளில் வந்துள்ளது.

### இளமை

இளமை என்னும் சொல்லுக்குச் சிறுபருவம், அறிவின்மை முதிராமை எனப் பல பொருள்களைக் கழகத் தமிழ் அகராதி தருகிறது.

**குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்**

**மழலைச்சொல் கேளா தவர்** (குறள் - 66)

குழந்தைகளை பார்ப்பதும் அவர்கள் அருகில் இருப்பதும் என்றுமே மகிழ்வையே தரும். பெற்றோர்களுக்குத் தன் குழந்தை களை பார்த்தால் ஒரு புன்னகை எப்பொழுதுமே தோன்றும். நகை மெய்ப் பாட்டில் இளமை என்பது இதனையே குறிக்கிறது.

அறிவு முதிர்ந்த உடலால் முதிர்ந்த ஒருவர் ஒரு குழந்தைத்தனமான காரியத்தை செய்யும் பொழுது அதை நகையாடத் தோன்றும்.. இதைப் போலவே இலக்கியங்களிலும் இளமை என்னும் மெய்ப்பாடு பல நிலைக் கலன்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

பாண்டிய நாட்டு கொற்கை துறைமுகத்தின் உப்பு வணிகர்களை உமணர்கள் என சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இவர் கள் உப்பு மூட்டைகளை வண்டியில் ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்பர். அப்பொழுது உமணர்கள் தங்கள் மனைவி மக்களையும் உடன் அழைத்துச் செல்வர். அவர்களுடனே தாங்கள் குழந்தைகளைப் போல் வளர்த்த குரங்கு குட்டிகளையும் ஆடை அலங்கார அணிகலன்கள் பூட்டி தம்மோடு தன் குழந்தைகளுடன் விளையாட அழைத்துச் செல்வர்.

அம் மந்திகள் குழந்தைகளுடனும் குடும்பத் தினருடனும் முத்துகள் பெய்த கிளிஞ்சல் சிற்பிகளை கொண்டு கிளுகிளுப்பை ஆட்டி விளையாடும். ஒளி பொருந்திய அணிகலன் கள் அணிந்த குழந்தைகளோடு குழந்தை யாகக் குரங்குகள் விளையாடி மகிழும்.

**மகாஅர் அன்ன மந்தி, மடவோர்**

**நகாஅர் அன்ன நளி நீர் முத்தம்,**

**வாள் வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி,**

**தோள் புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்**

**உளர் இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற**

**கிளர் பூண் புதல்வரொடு, கிலுகிலி ஆடும்**

(சிறுபாண் - 56-61)

### பேதைமை

பேதைமை என்பது அறியாமை. அறிவு நிரம்பப் பெறாதவர்கள் தன்னிடம் வந்து தவறானவற்றை கூறினால் அவற்றை அறியாதவன் போல நல்லியக்கோடன் விரும்பிக் கேட்பான். ஆறிந்தும் அறியாதவன் போல் இருக்கும் இப்பண்பை பேதைமை என்பர்.

நல்லியக்கோடனின் வரிசை அறிந்து பரிசு நல்கும் திறம். வரையாது வழங்கும் வள்ளல் தன்மை முதலியவற்றை இம்மன்னனிடம் பரிசுப்பொருள் பெற்ற பரிசிலர் புகழ்ந்து கூறினார்.

பரிசில் பெறும் நோக்கோடு தன்னிடம் வந்த பரிசிலர்க்கு வேண்டுவன வழங்கும் வள்ளல் குணம் கொண்டவன் இம்மன்னன். ஆயினும் பரிசிலரின் தகுதி அறிந்து அவர்களின் தகுதிக்கு இழுக்கு ஏற்படாத வகையில் வாரி வழங்குவான். இப்பண்பை வரிசை அறிந்து பரிசு கொடுத்தல் என்பர். பரிசிலரின் நெஞ்சம் அறிந்து நிறையுமாறும் அவர்கள் மட்டுமின்றி அவர்களின் உறவினர்களும் பெற்றுப் பயன் அடையும் வகையிலும் அளவில்லாப் பரிசுப்பொருட்களை வாரி வழங்குவான்.

**அறிவு மடம்படுதலும் அறிவு உடைமையும்**

**வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்**

**பரிசில் வாழ்க்கை பரிசிலர் ஏத்த**

(சிறுபாண் - 216-218)

நல்லியக்கோடனின் வாரி வழங்கும்; பண் பானது பரிசில் பெறுவோர்க்கு பயன்பெறும் வகையில் அமைந்தாலும் அவனுடைய பேதைமை இதன்கண் அறியமுடிகிறது.

### மடன்

மடன் என்னும் சொல்லுக்கு அறிவிலான் என்ற பொருளையே கழகத் தமிழ் அகராதி தருகிறது. மேலும் சில அகராதிகள் மடமை என்றும் பொருள் தருகின்றன. பிறருக்கு கொடுத்து உதவுவதில் ஏதுமறியாத மடன் உடையவர்களாகச் சிலரை இலக்கியங்களில் நாம் காண்கிறோம். குறிப்பாக புறநானூற்றில் அவ்வையார் நாஞ்சில் வள்ளுவனை பற்றி கூறும் பொழுது பிறருக்கு கொடுத்து உதவுவதில் ஏதும் அறியாத மடன்

உள்ளவனாக இருக்கிறான் எனப்பாடி இருப்பார். அதைப்போலவே இச்சிறு பாணாற்றுப் படையிலும் மழை பெய்து குளிருக்கு நடுங்கிக் கொண்டிருந்த மயிலுக்கு போர்வை போர்த்திய பேகனின் செயலும், தன் தேர் செல்லும் சாலை வழியில் படர்ந்திருந்த முல்லைக்கொடிக்குத் தன் தேரைக் கொடுத்துவிட்டு அரண்மனைக்கு நடந்தே வந்த பாரியைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**வானம் வாய்த்த வள மலைக் கவா அன்**
**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந் திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,**
**பெருங் கல் நாடன், பேகனும்; சுரும்பு உண**
**நறு வீ உறைக்கும் நாக நெடு வழிச்**
**சிறு வீ முல்லைக்குப் பெருந் தேர் நல்கிய,**
**பிறங்கு வெள் அருவி வீழும் சாரல்**
(சிறுபாண் - 84-90)

இச் செயல்களில் மடமே இருந்தாலும் அந்நேரத்தில் அவர்களுக்கு மனதில் தோன்றியதை அப்படியே நிகழ்த்தினர். பலன் அறியாமல் கொடுப்பதும் சிந்திக்காமல் கொடுப்பதுமே கொடை. கொடுக்கும் நேரத்தில் யோசிக்கும் அந்த சிறு வினாடி களில் கூட கொடை பெறுபவரின் மனதில் நமக்கு இது கிடைக்குமோ என்ற அச்சம் ஏற்படலாம். எனவேதான் பெரும் கொடை யாளர்கள் எல்லாம் எதுவும் யோசிக்காமல் கொடை அளிப்பர். இது போன்ற எண்ணங் களால் தான் இன்றும் நாம் கடையயெழு வள்ளல்களின் பெருமையைப் பேசிக் கொண்டிருக்கிறோம். இவர்கள் இருவர் செய்ததும் கொடையே எனினும் அதில் சிறு மடமை இருப்பதை அறிய முடிகிறது. எனவே இது பேதைமைக்குச் சான்றாக கொள்ளப்படுகிறது.

## முடிவுரை

மக்களின் உணர்வுகள் மற்றும் அவற்றை உடல் வெளிப்படுத்தும் தன்மை ஆகியவற்றை மிகவும் நுட்பமாகவும் அறிவில் பூர்வமாகவும் தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலில் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் ஒரு மெய்ப் பாட்டியல் அறிஞர் என்பதில் ஐயமில்லை. உரையாசிரியர்களின் புலமை சார்ந்த உரை நூல்களின் வாயிலாகவும் மேலும் பல இலக்கியச்சான்றுகள் கொண்டும் சிறுபாணாற்றுப்படையில் எவ்வாறெல்லாம் நகை மெய்ப்பாடு எடுத்தாளப்பட்டுள்ளது என்பது தகுந்த சான்றுகளோடு இக்கட்டுரை வழி அறியமுடிகிறது. எண்ணற்ற உணர்வுகள் பொதிந்து கிடந்தாலும் சில மட்டுமே காட்சிப்படுத்த முடிந்தது. மெய்ப்பாட்டின் நிலைக்கலன்களை ஆராய ஆற்றுப்படை நூல்கள் ஒரு பெரிய ஆய்வுக்களம் என்பதில் ஐயமில்லை.

## துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியம் - ஒளி பதிப்பகம், 63 டாக்டர் ரங்காச்சாரி சாலை, சென்னை - 600018 முதல் பதிப்பு (2008) - சரளா ராசகோபாலன்.
2. பத்துப்பாட்டும் பண்டைத் தமிழரும் - அறிவுப் பதிப்பகம், 142 இ ஜானி ஜான் கான் ரோடு ராயப்பேட்டை, சென்னை. முதல் பதிப்பு (2003) - சிதம்பரனார் சாமி.
3. ஆற்றுப்படை இலக்கியங்கள் - வாழ்வியல் களஞ்சியம் தொகுதி ஒன்று, தமிழ் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர். முதல் பதிப்பு (1984) - ஜெயபால்.
4. சிறுபாணாற்றுப்படை - கழக வெளியீடு சென்னை - 600018. (2001) - சோமசுந்தரனார் போ வே.
5. தமிழக வரலாறும் பண்பாடும் - உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600013. முதல் பதிப்பு (2008)- கே கே பிள்ளை.
6. தொல்காப்பிய பொருட்படலம் புத்துறை மெய்ப்பாட்டியல் - நாவலர் புத்தக நிலையம். மதுரை. - (1975) சோமசுந்தர பாரதியார்
7. இளம்பூரணர் உரை - (2010) தொல் காப்பியம் சாரதா பதிப்பகம் சென்னை.
8. தொல்காப்பியம் பொருள் அதிகாரம். பேராசிரியர் உரை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம். - (2012)- கு. சுந்தரமூர்த்தி
9. தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரை வளக்கோவை மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். (2009). ச.வே சுப்ரமணியன்.